# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 189 /2020

Deposition of witness for: PW - 1

| | | | |
|---|---|---|---|
| Name | :Pandiammal | Father/Husband Name: | Sakthivel |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 05.03.2021 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2021.

முதல் விசாரணை:

நான் குண்ணங்குடிப்பட்டியில் வசிக்கிறேன். கூலிவேலை செய்கிறேன். 1-வது எதிரி என் கணவர். மற்ற ஆஜர் எதிரிகளை தெரியும். 12.08.12ம் தேதி எனக்கும் 1-வது எதிரிக்கும் திருமணம் நடந்தது. நாங்கள் காதல் திருமணம் செய்துகொண்டோம். எங்களுக்கு ஒரு ஆண் குழந்தை உள்ளது. திருமணத்திற்கு பிறகு சிறிது நாட்கள் கழித்து எனது பெற்றோர் 10 பவுன் நகை கொடுத்தார்கள். 1-வது எதிரி டெய்லர் தொழில் செய்து வருகிறார். என் கணவர் அவரது தொழிலை விரிவுபடுத்துவதற்காக என்னுடைய 10 பவுன் நகையை வாங்கி கடையை விரிவுபடுத்தினார். பிறகு சிறிது நாட்கள் சந்தோசமாக இருந்தோம். என் மகன் பிறந்து 2 வருடம் கழித்து இரவு நேரங்களில் அடிக்கடி என் கணவருக்கு போன் வருவதைப்பற்றி கேட்டதற்கு என் கணவரும் சாந்தி என்பவரும் ஆபாசமாக எடுத்துக்கொண்ட புகைப்படத்தை காட்டி என்னை மிரட்டினார். இவளோடுதான் நான் சந்தோசமாக வாழ்வேன், உன்னோடு வாழமுடியாது என்று கூறி என்னை அடித்து துன்புறுத்தினார். மேலும் உன்னையும, உன் குழந்தையையும் பெட்ரோல் ஊற்றி கொளுத்தினாலும் உன் சமூகத்தினர் என்னை கேட்கமுடியாது என்றும் கூறி அதிகமாக அடித்து துன்புறுத்தினார். என்னை மண்டையை உடைத்தும், பல்லை உடைத்தும் துன்புறுத்தினார், நான் வீட்டைவிட்டு வெளியே வந்தாலும் தலைமுடியை இழுத்துச்சென்று அடிப்பார். 1-வது எதிரி 20 ரூபாய் பத்திரத்தில் அவருடன் எனக்கும் என் மகனுக்கும் எந்த உறவுமில்லை என்றுகூறி கையெழுத்துப்போடுமாறு கேட்டார். போட மறுத்தால் உன்னை பெட்ரோல் ஊற்றி எறித்துவிடுவேன் என்று மிரட்டினார்.

அதை நான் என் மாமியார் வீரம்மாளிடம் சொன்னபோது அவரும் என்னை நீ என் சாதிய சனமா என்று சொல்லி என்னை அடித்து துன்புறுத்தினார். எதிரிகள் சாந்தி மற்றும் பழனியம்மாளும் ஏன் எங்களை துன்புறுத்துகிறாய் என்று கேட்டு என்னை அடித்தார்கள். மறுநாள் 1-வது எதிரியும் சின்னக்காளை என்பவரும் என்னை பத்திரத்தில் கையெழுத்து போடுமாறு கேட்டு இல்லையென்றால் உன்னை பெட்ரோல் ஊற்றி கொளுத்திவிடுவேன் என்றும், உன்னையும் பிள்ளையையும் எங்காவது காடுமாத்தி கொண்டுபோய் விட்டுவிடுவேன் என்றும் மிரட்டினார். மேற்படி சம்பவத்தின்போது என் கணவர் என்னை அதிகமாக அடித்து சித்திரவதை செய்ததில் நான் வெளியே செல்ல முயற்சித்தபோது அருகிலிருந்த கல்லில் என் கணவர் வேஷ்டி தடுமாறி விழுந்து அவரது கையில் எலும்பு முறிவு ஏற்பட்டது. அதனால் அவர் என்னையும் என் குடும்பத்தாரையும் மொத்தம் 6 பேர்மீது கொட்டாம்பட்டி காவல்நிலையத்தில் புகார் கொடுத்திருந்தார். அதன்பேரில் நாங்கள் நீதிமன்றத்தின்மூலம் ஜாமீன் எடுத்து காவல்நிலையத்தில் கையெழுத்து போடச்சென்றபோது என் கணவரும் சின்ன்காளையும் வந்து வழிமறித்து கையெழுத்து போடுகிறாயா இல்லை உன்னையும் உன் பிள்ளையையும் எறித்துவிடுவோம் என்று மிரட்டினார்கள். அதனால் நான் மேலூர் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் வந்து புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்ததுதான், அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த புகார் அ.சா.ஆ.1 ஆகும், போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை:

சந்தர்ப்பம் அளித்தும் செய்யவில்லை.

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.

C.C.No. 189 /2020

Deposition of witness for: PW - 2

| | | | |
|---|---|---|---|
| Name | :Andichamy | Father/Husband Name: | Chinnakkalai |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 05.03.2021 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2021.

முதல் விசாரணை:

நான் குண்ணங்குடிப்பட்டியில் வசிக்கிறேன். நான் தமிழ்நாடு காவல்துறையில் பணிபுரிந்து ஓய்வுபெற்று வீட்டிலிருந்து வருகிறேன். அ.சா.1 என் அக்கா மகள். ஆஜர் எதிரிகளை தெரியும். சுமார் 15 அல்லது 20 வருடங்களுக்கு முன்பாக அ.சா.1க்கும், 1-வது எதிரிக்கும் திருமணம் நடந்தது. அவர்களுக்கு ஒரு ஆண்குழந்தை உள்ளது. 1-வது எதிரி டெய்லராக வேலை பார்த்து வந்தார். அவரது தொழிலை விரிவுபடுத்துவதற்காக அ.சா.1-ன் 10 பவுன் நகையை வாங்கிவிட்டார். பிறகு நாங்கள் சம்பவம்பற்றி கேட்பதற்காக எதிரியின் வீட்டிற்கு சென்றிருந்தபோது 1-வது எதிரி நகை நட்டுகளை கேட்கக்கூடாது என்று சொல்லி எங்களை பெட்ரோல் ஊற்றி எறித்துவிடுவதாக கூறினார். போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை:

நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள விசயங்களை சொன்ன விசயங்களைத்தான் சொன்னேன் என்றால் சரிதான். கொட்டாம்பட்டி காவல்நிலையத்தில் போலீசாரிடம் சொன்னேன். கொட்டாம்பட்டி போலீசார்தான் என்னை விசாரித்தனர் என்றால் சரிதான். நான் முதல் விசாணையில்சொன்ன விசயங்கள் பாண்டியம்மாள் சொல்லித்தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான்.